எம்.சி.ஓ.பி எண்: 7622 /2015 தேதி: 07.04.2026

மசா. : 1

பெயர் : விக்னேஷ்பாலாஜி

த/பெ. : பழனிச்சாமி

வயது : 34

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 8 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 7 ஆவணம் மட்டும் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து நான் புகார் கொடுத்தேனா என்றால் என் நண்பர் புகார் கொடுத்தார். எனக்கு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பில்கள் மருந்து வாங்கியதற்கான பில்கள். ஒரு ஸ்கேன் செய்ததற்கான பில்லும் உள்ளது. மருந்து சீட்டு , மருத்துவ பதிவேடுகள் தாக்கல் செய்யவில்லை. உள்நோயாளியாக ஒருநாள் மட்டும் சிகிச்சை பெற்றேன். பிறநாட்கள் எல்லாம் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றேன். விபத்தினால் காயம் ஏற்படவில்லை என்பதால் மருந்து சீட்டுகள் தாக்கல் செய்யவில்லை. மருந்து சீட்டு உள்ளது. அதை தாக்கல் செய்ய முடியும். விபத்து சமயத்தில் எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்ய முடியும்.மனுவில் ஏர்டெல் நிறுவனத்தில் வேலை செய்வதாக சொல்லிருக்கிறேன். பிரமாணாவாக்குமூலத்தில் டெலிசோனிக் நிறுவனத்தில் வேலை செய்வதாக சொல்லிருக்கிறேன். இரண்டு நிறுவனங்களும் ஒன்றுதான். நான் மாதம் ரூபாய் 20 ஆயிரம் சம்பாதிக்கிறேன் என்பதை நிருபிக்க ஆவணங்கள் உள்ளது. அதை தாக்கல் செய்யமுடியும். வருமான இழப்பு குறித்து வங்கி கணக்கு விவரம் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து பேருந்து யூடார்ன் செய்யும்போது நான் பேருந்தில் மோதியதால் ஏற்பட்டது என்றால்சரியல்ல. பேருந்து திரும்பும்போது என்னுடைய இருசக்கர வாகனத்தை இடித்துவிட்டது. யூடார்ன் செய்யும் பேருந்தை நான் முந்தி செல்லமுயன்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

என்னுடைய அஜாக்கிருதையால் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனால் இரண்டாம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.